**ஏப்ரல் – 22**

# TNPSC துளிகள்

- தற்போது, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் இணை செயலாளராகப் பணியாற்றி வரும் திருமதி ஸ்ரீபிரியா ரங்கநாதன் (IFS : 1994) கொரியக் குடியரசிற்கான இந்தியாவின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## ஒரே மாதிரியான சாலை வரி அமைப்பு

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகத்தினால் அமைக்கப்பட்ட அமைச்சர்களின் குழு வணிகரீதியிலான வாகனங்களின் நாடு முழுவதுமான எளிதான இயக்கத்திற்காக ஒரு தேசம் ஒரு வரி என்ற கொள்கையை முன்மொழிந்துள்ளது.
- இரண்டு நாள் நடைபெற்ற இந்த அமைச்சர்கள் குழுவின் மாநாடு ராஜஸ்தான் போக்குவரத்து அமைச்சர் யூனுஸ்கான் அவர்களின் தலைமையில் அஸ்ஸாமின் கவுகாத்தியில் நடைபெற்றது.
- இந்த முன்மொழிவு
    - ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு சாலை வரிவிதிப்பு ஏதுமின்றி வாகனங்களின் இயக்கத்திற்கு அனுமதிக்கிறது.
    - குறைந்த வரியுடைய மாநிலங்களில் வாகனங்களைப் பதிவு செய்து மற்ற மாநிலங்களில் தங்களது வாகனங்களை இயக்கும் மக்களை கண்காணிக்கின்றது.
- மோட்டார் வாகனங்களில், வரியை விதிப்பதற்கான கொள்கைகளை தீர்மானிப்பதற்கான அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. விலைப்பட்டியலிலுள்ள வாகன விலையின் மூன்று அடுக்குகளை அடிப்படையாகக் கொண்டே இந்த ஒரே மாதிரியான வரி விதிக்கப்படும்.
- 10 லட்சத்திற்கும் கீழான விலையுடைய வாகனங்களின் மீதான வரி 8%, 10-20 லட்சம் மதிப்புடைய வாகனங்களின் மீதான வரி 10%, 20 லட்சத்திற்கும் மேலான மதிப்புடைய வாகனங்களின் மீதான வரி 12% ஆகும்.
- மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களுக்கு வரியில் 2% தள்ளுபடியும், டீசல் வாகனங்களுக்கு 2% கூடுதல் வரியும் விதிக்கப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## பெண்கள் மற்றும் ஆண்களுக்கான சமமான ஊதியத்திற்கான சட்டம்

- ஐக்கிய அரபு அமீரகத்தின் கேபினெட் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான சமமான ஊதியத்திற்கான சட்டத்தை இயற்றுவதற்கான முன்மொழிவை வழங்கியுள்ளது.

- புதிய சட்டம் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சமமான ஊதியம் வழங்கப்படுதலை உறுதி செய்யும்.
- இந்த சட்டம் இயற்றலுக்கான முன்மொழிவானது, பெண்களின் உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் தேசிய மேம்பாட்டு நடைமுறைகளில் பெண்களின் செயல்பாடுகளை ஆதரித்தல் ஆகியவற்றை உறுதி செய்யும் அரசின் நோக்கத்தின் வரிசையில் அமைந்துள்ளது.
- கடந்த சில ஆண்டுகளாக, ஐக்கிய அரபு அமீரக அரசானது பாலின சமத்துவத்திற்கான ஐக்கிய அரபு அமீரகக் கழகத்தை 2015-ல் நிறுவியது உட்பட பல்வேறு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகளின் மூலமாக நாட்டில் பாலின இடைவெளியை குறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரக அரசு உலகின் முதல் பாலின சமச்சீர் வழிகாட்டியை (Gender Balance Guide) செப்டம்பர் 2017ல் தொடங்கியது.
- இந்த வழிகாட்டியானது, பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டிற்கான நிறுவனத்தால், ஐக்கிய அரபு அமீரகத்தின் பாலின சமச்சீர் கழகத்துடன் கூட்டிணைந்து 2017 இல் தயாரிக்கப்பட்டது.
- ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அதன் நிறுவனங்களுக்கு பயன்படுத்தப்படாத பெண்களின் ஆற்றல் வளத்தை மேம்படுத்த இவ்வழிகாட்டி ஒரு வரைபடத்தை வழங்குகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## உலகின் ஆறாவது மிகப்பெரிய பொருளாதாரம்

- ஏப்ரல் 2018 ஆம் ஆண்டிற்கான சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதார கண்ணோட்டத்தின் படி, இந்தியா தற்போது $2.6 டிரில்லியனுடன் (GDPயில்) ஆறாவது பெரிய பொருளாதாரமாக உருவெடுத்துள்ளது. இதற்கு முன்னால் பிரான்சு ஆறாவது இடத்திலிருந்தது குறிப்பிடத்தக்கது.
- முதல் ஐந்து பொருளாதார நாடுகள்: அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து.
- சர்வதேச நாணய நிதியத்தின் படி, 2018 இல் 7.4% என்ற அளவிலும் 2019 இல் 7.8% என்ற அளவிலும் இந்தியா பொருளாதார வளர்ச்சியைக் கண்டு உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக உருவெடுக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## உத்தரகாண்ட்டின் இரண்டாவது உணவுப் பூங்கா

- உத்தரகாண்ட் மாநிலத்தின் இரண்டாவது உணவுப் பூங்கா உதாம் சிங் நகர் மாவட்டத்திலுள்ள காஷிப்பூரின் மாகுவா ஹேரா கன்ச்சில் ஹிமாலயன் மெகா உணவுப் பூங்கா தனியார் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.
- மாநிலத்தின் முதல் உணவுப் பூங்கா ஹரித்துவார் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது செயல்பாட்டிலுள்ளது.
- மெகா உணவுப் பூங்கா திட்டத்தின் கீழ் உள்ள திட்டங்கள் பிரதம மந்திரி கிசன் சம்பத யோஜனா திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஷோரென்ஸ்டீன் இதழியல் விருது

- தி வயர் (The Wire) இதழின் நிறுவன ஆசிரியரான (founding editor) சித்தார்த் வரதராஜன் அவர்களுக்கு 2017 ஆம் ஆண்டிற்கான ஷோரென்ஸ்டீன் இதழியல் விருது (Shorenstein Journalism) அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் (Stanford University) வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய சித்தார்த் வரதராஜனின் துணிகர குறிப்புகளுக்காக (courageous accounts) அவருக்கு ஷோரென்ஸ்டீன் இதழியல் விருது வழங்கப்பட்டுள்ளது.

### *ஷோரென்ஸ்டீன் விருதைப் பற்றி*

- அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் வால்டர் H. ஷோரென்ஸ்டீன் ஆசியா – பசுபிக் ஆராய்ச்சி மையத்தால் (Walter H. Shorenstein Asia-Pacific Research Centre) ஷோரென்ஸ்டீன் விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றது.



- ஆசியாவின் மீது சிறந்த அறிக்கையை வெளியிட்ட மற்றும் ஆசிய

பிராந்தியத்தினைப் பற்றிய மேற்கத்திய உலகின் புரிதலுக்கு கணிசமான பங்களிப்பு ஆற்றிய இதழியலாளர்களை கவுரவிப்பதற்காக இவ்விருது வழங்கப்படுகின்றது.

- 2002 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த ஷோரென்ஸ்டீன் விருதினை இதற்கு முன் 15 இதழியலாளர்கள் பெற்றுள்ளனர்.
- ஆரம்பத்தில் இவ்விருது தனித்துவமான புகழ்மிக்க அமெரிக்க இதழியலாளர்களை கவுரவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. பின் 2011-ஆம் ஆண்டு மேற்கத்திய நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த தனித்துவமான புகழ்மிக்க இதழியலாளர்களை கவுரவிக்கும் வகையில் இந்த விருதில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2018

- 21-வது காமன்வெல்த் போட்டிகள் (Commonwealth Games) அண்மையில் ஆஸ்திரேலியா நாட்டின் கோல்டுகோஸ்ட் நகரில் (Gold Coast) நடைபெற்று முடிந்தது.
- இந்த 21-வது காமன்வெல்த் போட்டியில் மொத்தம் 275 தங்கப் பதக்கங்களுக்கு 71 நாடுகளைச் சேர்ந்த 4,500க்கும் அதிகமான தடகள வீரர்கள் போட்டியிட்டனர்.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பதக்க போட்டிகளை ஒரே எண்ணிக்கையில் கொண்ட முதல் பெரும் அளவிலான பன்-விளையாட்டு போட்டி (Major multi-sport event) இதுவேயாகும்.
- இந்த காமன்வெல்த் போட்டிக்கு 227 வீரர்களைக் கொண்ட அணியை இந்தியா அனுப்பி வைத்தது.
- இந்த காமன்வெல்த் போட்டியின் துவக்க விழா கொண்டாட்டத்தில் இந்தியக் கொடியை பாட்மிண்டன் வீராங்கனையான P.V. சிந்து ஏந்திச் சென்றார் (flag-bearer).
- இந்த காமன்வெல்த் போட்டியில் 26 தங்கம், 20 வெள்ளி மற்றும் 20 வெண்கலம் என மொத்தம் 66 பதக்கங்களை வென்று இந்தியா பதக்கப் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- 80 தங்கம், 59 வெள்ளி, 59 வெண்கலம் என மொத்தம் 198 பதக்கங்களை வென்று ஆஸ்திரேலியா பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- 45 தங்கம், 45 வெள்ளி, 46 வெண்கலம் என மொத்தம் 136 பதக்கங்களை வென்று இங்கிலாந்து பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

*தங்கப் பதக்கம் வென்றவர்கள் – விளையாட்டுப் போட்டிகள்*

| வீரரின் பெயர் | விளையாட்டு |
|---|---|
| சாய்னா நேவால் | பெண்கள் ஒற்றையர் பாட்மிண்டன் போட்டி |
| விகாஸ் கிருஷ்ணா | குத்துச் சண்டை – 75 கிலோ எடைப் பிரிவு |
| மணிகா | • பெண்களுக்கான ஒற்றையர் டேபுள் டென்னிஸ் போட்டி<br>• காமன்வெல்த்தில் டேபுள் டென்னிஸ் போட்டி போட்டியில் தங்கம் வெல்லும் |

| | |
|---|---|
| | முதல் இந்தியப் பெண் இவராவார். |
| வினேஷ் போகாட் | மல்யுத்தம் – மகளிர் ப்ரீ ஸ்டைல் 50 கிலோ நார்டிக் போட்டி |
| நீரஜ் சோப்ரா | • ஈட்டி எறிதல்<br>• காமன்வெல்த் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ள முதல் இந்திய ஈட்டி எறிதல் வீரர் இவராவார். |
| கவுரவ் சோலங்கி | குத்துச் சண்டை – 52 கிலோ எடைப் பிரிவு |
| சுமித் மாலிக் | மல்யுத்தம் – ஆண்களுக்கான பீரிஸ்டைல் 125 கிலோ எடைப் பிரிவு |
| சஞ்சீவ் ராஜ்புத் | துப்பாக்கிச் சுடுதல் – 50 மீட்டர் ரைபிள் 3 நிலை சுடுதல் போட்டி. (3 Position shooting) |
| M.C மேரிகோம் | • குத்துச் சண்டை – 45 முதல் 48 கிலோ வரையிலான எடைப் பிரிவு.<br>• மேரிகோம் தன்னுடைய முதல் காமன்வெல்த் போட்டியான இப்போட்டியில் தங்கம் வென்றுள்ளார். |
| பஜ்ரங் பூனியா | • மல்யுத்தம் – பீரி ஸ்டைல் 65 கிலோ எடைப்பிரிவு |
| தேஜஸ்வினி சவந்த் | துப்பாக்கி சுடுதல் – 50 மீட்டர் ரைபிள் சுடுதல் போட்டி |
| அனிஷ் பன்வாலா | • துப்பாக்கிச் சுடுதல் – 25 மீட்டர் விரைவு பிஸ்டல் சுடுதல் போட்டி<br>• காமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்ற இளைய வீரர் இவராவார் |
| சுஷில் குமார் | • மல்யுத்தம் – ஆண்களுக்கான பீரி ஸ்டைல் 74 கிலோ எடைப் பிரிவு.<br>• இவர் தனது மூன்றாவது தொடர்ச்சியான காமன் வெல்த் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார் |
| ராகுல் அவார் | மல்யுத்தம் – ஆண்களுக்கான பீரி ஸ்டைல் 57 கிலோ எடைப்பிரிவு |
| ஸ்ரேயாஸி சிங் | துப்பாக்கி சுடுதல்-டபுள் டிராப் மகளிர் துப்பாக்கி சுடுதல் |
| ஹீனா சித்து | துப்பாக்கி சுடுதல் – 25 மீட்டர் பிஸ்டல் சுடுதல் போட்டி |
| ஜித்து ராய் | துப்பாக்கி சுடுதல் – 10 மீட்டர் ஆண்களுக்கான ஏர் பிஸ்டல் போட்டி |

| | |
|---|---|
| மனு பெக்கர் | துப்பாக்கி சுடுதல் – பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டி |
| பூனம் யாதவ் | பளு தூக்குதல் – பெண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு |
| வெங்கட் ராகுல் ரகாலா | பளுதூக்குதல் – ஆண்களுக்கான 85 கிலோ எடைப்பிரிவு |
| சதீஸ்குமார் சிவலிங்கம் | பளுதூக்குதல் – ஆண்களுக்கான 77 கிலோ எடைப்பிரிவு |
| சஞ்சிதா சானு | பளு தூக்குதல் – பெண்களுக்கான 53 கிலோ எடைப்பிரிவு |
| மீராபாய் சானு | பளுதூக்குதல் – பெண்களுக்கான 48 கிலோ எடைப்பிரிவு |

- இந்தியாவின் ஆண்கள் டேபுள் டென்னிஸ் அணி நைஜீரியாவை வீழ்த்தி தங்கம் வென்றுள்ளது.
- பெண்கள் டேபுள் டென்னிஸ் போட்டியில் இந்திய டேபுள் டென்னிஸ் மகளிர் அணி முதல் முறையாக தங்கம் வென்றுள்ளது.
- சத்விக் ரன்கி ரெட்டி மற்றும் அஸ்வினி பொன்னப்பா ஆகியோர் அடங்கிய கலப்பு இரட்டையர் பாட்மிண்டன் அணி இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக காமன்வெல்த் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

### *வெள்ளிப் பதக்கம் வென்றவர்கள் - விளையாட்டுப் போட்டி*

| வீரரின் பெயர் | விளையாட்டு |
|---|---|
| P.V. சிந்து | பாட்மிண்டன் – பெண்கள் ஒற்றையர் பாட்மிண்டன் போட்டி<br><br>இறுதிப் போட்டியில் இந்தியாவின் சாய்னா நேவாலுக்கு எதிராக பதக்கம் வென்றார். |
| கிடாம்பி ஸ்ரீகாந்த் | பாட்மிண்டன் – ஆண்கள் ஒற்றையர் பிரிவு |
| தீபிகா பல்லிகல் மற்றும்<br><br>ஜோஷ்னா சின்னப்பா | பெண்கள் இரட்டையர் ஸ்குவாஷ் போட்டி |
| தீபிகா பல்லிக்கல் மற்றும்<br><br>சவ்ரவ் கோஷல் | கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் போட்டி |
| மணிஷ் கௌசிக் | குத்துச் சண்டை – ஆண்களுக்கான 60 கிலோ எடைப்பிரிவு |
| அமித் பங்கல் | குத்துச் சண்டை – ஆண்களுக்கான 46-49 கிலோ எடைப்பிரிவு |

| | |
|---|---|
| மணிகா பத்ரா மற்றும் மவுமா தாஸ் | டேபுள் டென்னிஸ் பெண்கள் இரட்டையர் பிரிவு- காமன்வெல்த் போட்டியில் டேபுள் டென்னிஸ் விளையாட்டில் இந்தியாவின் முதல் வெள்ளிப் பதக்கம் இதுவாகும் |
| அஞ்சும் மவுட்கில் | துப்பாக்கி சுடுதல் – பெண்களுக்கான 50மீட்டர் ரைபிள் 3 நிலை சுடுதல் பிரிவு |
| பூஜா தண்டா | மல்யுத்தம் – பெண்களுக்கான 57 கிலோ எடைப்பிரிவு |
| மவுசம் கத்ரி | மல்யுத்தம் – ஆண்களுக்கான 97 கிலோ எடைப் பிரிவு |
| சீமா பூனியா | பெண்களுக்கான வட்டெறிதல் |
| மெகுலி கோஷ் | துப்பாக்கி சுடுதல் – பெண்களுக்கான 10மீட்டர் ஏர்பிஸ்டல் போட்டி |
| ஹீனா சித்து | துப்பாக்கி சுடுதல் – பெண்களுக்கான 10மீட்டர் ஏர்பிஸ்டல் போட்டி |
| P. குருராஜா | பளுதூக்குதல் – ஆண்களுக்கான 56 கிலோ எடைப்பிரிவு |
| தேஜஸ்வினி சாவந்த் | துப்பாக்கி சுடுதல் – 50 மீட்டர் ஏர்பிஸ்டல் பிரிவு |
| பபிதா குமாரி | மல்யுத்தம் – 53 கிலோ எடைப்பிரிவு |

*வெண்கலப் பதக்கம் வென்றவர்கள் - விளையாட்டுப் போட்டி*

| வீரரின் பெயர் | விளையாட்டு |
|---|---|
| மணிகா பத்ரா மற்றும் G.சத்யன் | கலப்பு இரட்டையர் – டேபுள் டென்னிஸ் |
| ஷரத் கமல் | ஆண்களுக்கான ஒற்றையர் – டேபுள் டென்னிஸ் |
| ஹர்மீத் தேசாய் மற்றும் சுனில் சங்கர் ஷெட்டி | ஆண்களுக்கான இரட்டையர் டேபுள் டென்னிஸ் போட்டி |
| அஸ்வினி பொன்னப்பா மற்றும் சிக்கி ரெட்டி | பெண்கள் இரட்டையர் டேபுள் டென்னிஸ் போட்டி |
| சோம்வீர் | மல்யுத்தம் – ஆண்களுக்கான ப்ரீஸ்டைல் 86 கிலோ எடைப்பிரிவு |
| சாக்சி மாலிக் | மல்யுத்தம் – பெண்களுக்கான ப்ரீ ஸ்டைல் 62 கிலோ எடைப்பிரிவு |
| நமன் தன்வர் | குத்துச் சண்டை- ஆண்களுக்கான 91 கிலோ எடைப்பிரிவு |

| | |
|---|---|
| மனோஜ் குமார் | குத்துச் சண்டை – ஆண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு |
| ஹூசாமுதின் முகம்மது | குத்துச் சண்டை- ஆண்குளுக்கான 56 கிலோ எடைப்பிரிவு |
| திவ்யா கக்ரன் | மல்யுத்தம்–பெண்களுக்கான ப்ரீஸ்டைல் 68 கிலோ எடைப்பிரிவு |
| நவ்ஜித் தில்லான் | பெண்களுக்கான வட்டெறிதல் |
| கிரண் | மல்யுத்தம் – பெண்களுக்கான 76 கிலோ பீரிஸ்டைல் எடைப்பிரிவு |
| அன்குர் மிட்டல் | துப்பாக்கி சுடுதல் – ஆண்களுக்கான டபுள் டிராப் துப்பாக்கி சுடுதல் போட்டி |
| ஓம் மிதர்வால் | துப்பாக்கிச் சுடுதல்- 50 மீட்டர் ஆண்களுக்கான பிஸ்டல், 10 மீட்டர் ஆண்களுக்கான ஏர் பிஸ்டல் துப்பாக்கிச் சுடுதல் போட்டி |
| அபூர்வி சண்டேலா | துப்பாக்கி சுடுதல் – பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் சுடுதல் போட்டி. |
| விகாஸ் தாகூர் | பளு தூக்குதல் – ஆண்களுக்கான 94 கிலோ எடைப்பிரிவு |
| சச்சின் சௌத்ரி | பாரா பவர்லிப்டிங்கில் ஆண்களுக்கான ஹெவிவெயிட் பிரிவு |
| ரவிகுமார் | துப்பாக்கி சுடுதல் – ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் சுடுதல் போட்டி |
| தீபக் லதெர் | பளுதூக்குதல் – ஆண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு - காமன்வெல்த் போட்டியில் பதக்கம் வெல்லும் மிகவும் இளைய இந்திய பளுதூக்குதல் வீரர் இவராவார். |

*காமன்வெல்த் போட்டிகளைப் பற்றி*

- காமன்வெல்த் நாடுகள் அமைப்பினுடைய (Commonwealth nations) 53 உறுப்பு நாடுகளிலிருந்து அவற்றின் தடகள வீரர்கள் பங்குபெறும் மிகப்பெரிய பன்-விளையாட்டு (multi-sport events) போட்டியே காமன்வெல்த் போட்டியாகும்.

## CWG MEDALS TALLY 2018

| POS | COUNTRY | Gold | Silver | Bronze | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | Australia | 80 | 59 | 59 | 198 |
| 2 | England | 45 | 45 | 46 | 136 |
| 3 | India | 26 | 20 | 20 | 66 |
| 4 | Canada | 15 | 40 | 27 | 82 |
| 5 | New Zealand | 15 | 16 | 15 | 46 |
| 6 | South Africa | 13 | 11 | 13 | 37 |
| 7 | Wales | 10 | 12 | 14 | 36 |
| 8 | Scotland | 9 | 13 | 22 | 44 |
| 9 | Nigeria | 9 | 9 | 6 | 24 |
| 10 | Cyprus | 8 | 1 | 5 | 14 |

- முதல் காமன்வெல்த் போட்டியானது 1930 ஆம் ஆண்டு நடைபெற்றது.
- நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை காமன்வெல்த் போட்டிகள் நடத்தப்படுகின்றன..
- காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் கூட்டமைப்பானது (Commonwealth Games Federation-CGF) காமன்வெல்த் போட்டிகளின் மேற்பார்வைக்கான முதன்மை நிறுவனமாகும்.
- 2010 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை இந்தியா காமன்வெல்த் போட்டியின் 19-வது பதிப்பை புது தில்லியில் நடத்தியது குறிப்பிடத்தக்கது.
- நியூஸிலாந்து நாட்டின் ஆக்லாந்தில் உள்ள காமன்வெல்த் விளையாட்டு போட்டிக்கான கூட்டமைப்பின் பொதுக்குழு சந்திப்பில் 2022-ஆம் ஆண்டின் காமன்வெல்த் போட்டியை நடத்த தென்னாப்பிரிக்க நாட்டின் டர்பன் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

\- - - - - - - - - - - - - - -